செ.வெ.எண்.05 நாள் : 04.04.2019

**வாக்காளர் உதவி மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் மற்றும் தேர்தல் பொது பார்வையாளர் ஆகியோர் பார்வையிட்டார்கள்.**

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தேர்தல் பிரிவில் இயங்கி வரும் வாக்காளர் உதவி மையத்தினை 27.சிதம்பரம் (தனி) நாடாளுமன்ற தொகுதிக்கு தேர்தல் பொது பார்வையாளர் **முனைவர்.கே.ஹெச்.குல்கர்னி, இஆப.,** அவர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

**இந்நிகழ்வில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2019 முன்னிட்டு, வாக்காளர்கள் தங்களது வாக்குச்சாவடி மையம், வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர் உள்ளனவா, பெயர் மாற்றம், முவகரி மாற்றம் போன்ற பல்வேறு வகையான கோரிக்கைகளை 1950 மற்றும் 18005997301 ஆகிய கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். இச்சேவை மையத்தில் பணிபுரியும் பணியாளர்கள் உடனடியாக வாக்காளர்களின் கோரிக்கையினை கூர்ந்து ஆய்வு செய்து அவர்களுக்கான தகவல்களை வழங்குவார்கள். அதன் அடிப்படையில், நமது வாக்காளர் சேவை மையமானது, 30.01.2019 முதல் செயல்பட்டு வருகின்றது. அவற்றில் 1119 தகவல்கள் மற்றும் புகார்கள் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சேவை மையத்தில் ஒரு பொறுப்பு அலுவலர், 2 கணினி ஆப்ரேட்டர்கள் சுழற்சி முறையில் பணியமர்த்தப்பட்டுள்ளன. இவர்கள் 3 கட்ட சுழற்சி முறையாக 24 மணிநேர பணியில் இருப்பார்கள். எனவே, அனைத்து வாக்காளர்கள் இச்சேவை மையத்தினை தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் பொற்கொடி, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் நா.சத்தியநாராயணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் தா.பரிதாபானு, தேர்தல் வட்டாட்சியர் சந்திரசேகரன் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**